


▲ பக்கவாதத்தால் மூளையின் பெரிய ரத்தக்குழாய் அடைப்புக்கு சென்னை மியாட் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று குணமடைந்த கலாவதி, சீனிவாசராவ் ஆகியோருடன் மருத்துவமனை நிறுவனர் மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், ரத்தநாள சிகிச்சைத் துறைத் தலைவர் கே.முரளி, நரம்பியல் சிகிச்சைத் துறைத் தலைவர் கிருஷ்ணன் பாலகோபால் ஆகியோர்.

## பக்கவாதத்தால் ஏற்படும் மூளையின் ரத்தக்குழாய் அடைப்புக்கு

# மியாட் மருத்துவமனையில் அதிநவீன சிகிச்சை

■ சென்னை

இந்தியாவில் முதல் முறையாக சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனையில் பக்கவாதத்தால் ஏற்படும் மூளையின் ரத்தக் குழாய் அடைப்புக்கு அதிநவீன முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மியாட் மருத்துவமனை நிறுவனர் மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், ரத்தநாள சிகிச்சைத் துறைத் தலைவர் கே.முரளி, நரம்பியல் சிகிச்சைத் துறைத் தலைவர் கிருஷ்ணன் பாலகோபால் ஆகியோர் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியாவில் ஆண்டுதோறும் 1.6 மில்லியன் மக்கள் பக்கவாத நோயால் பாதிக்கப்படுகிறார்கள். பக்கவாதம் வந்தால் மூளையில் உள்ள ரத்தக்குழாயில் ரத்தம் உறைந்து அடைப்பு ஏற்படும். இதனால் மூளையின் செயல்பாடு குறைவதுடன் பேசவும், கேட்கவும் முடியாத நிலை ஏற்படும். நினைவுகளும் மறந்துவிடும். உடலின் ஒரு பகுதி செயலிழக்கும்.

சிறிய ரத்தக் குழாயில் அடைப்பு இருந்தால் ரூ.50 ஆயிரம் விலையுள்ள மருந்தை ஊசி மூலம் செலுத்தி அடைப்பை சரிசெய்ய முடியும். பெரிய அடைப்பை அந்த ஊசியால் சரிசெய்ய முடியாது. அதனால் இந்தியாவில் முதல் முறையாக சிறிய மற்றும் பெரிய ரத்தக் குழாய் அடைப்பை நீக்குவதற்காக மியாட் மருத்துவமனையில் மியாட் ஸ்டோர்க் ரெஸ்டோர் சென்டர் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சென்டரில் மெக்கானிக்கல் த்ராம்பக்டமி முறையில் பக்கவாதத்தால் பெரிய ரத்தக்குழாய் அடைப்பு ஏற்பட்டவரின் காலில் உள்ள ரத்தக்குழாய் மூலம் டியூப் ஒன்றை மூளை வரை கொண்டு சென்று அடைப்பை நீக்குகிறோம்.

இந்த சென்டரில் கடந்த 6 மாதங்களில் 14 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. பக்கவாதம் ஏற்பட்டால் உடனடியாக மியாட் ஸ்ட்ரோக் ரெஸ்டோர் சென்டரை 105710 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். பக்கவாதம் ஏற்பட்டால் நேரம் தான் மிகவும் முக்கியம். விரைவாக மருத்துவமனைக்கு சென்றால் பாதிப்புகளை தடுக்க முடியும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

பேட்டியின் போது பக்கவாதத்தால் மூளையில் பெரிய ரத்தக்குழாய் பாதிக்கப்பட்டு மியாட் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்த கலாவதி, சீனிவாசராவ் ஆகியோர் உடன் இருந்தனர்.